# ஜெயகாந்தன் உரைகள்

## அக்டோபர் 2015




மக்கள் சிந்தனைப் பேரவையின் சார்பில் நடைபெற்ற 2002 ஆம் ஆண்டின் பாரதிவிழாவில் எழுத்தாளர் த. ஜெயகாந்தன் அவர்களுக்கு 'பாரதி விருது' வழங்கப்பட்டது. விருதைப் பெற்றுக் கொண்டு ஜெயகாந்தன் ஆற்றிய ஏற்புரை என்ற பெயரிலான சிறப்புரை மிகவும் அழகானது… ஆழமானது.

2006 ஆம் ஆண்டு நடைபெற்ற ஈரோடு புத்தகத் திருவிழாவில் ' புத்தகம் ' என்ற தலைப்பில் ஓர் அற்புதமான சொற்பொழிவாற்றினார் ஜெயகாந்தன்.

இந்த இரண்டு உரைகளையும் காற்றில் கலந்து காணாமல் போய்விடாமல் காலகாலத்திற்கும் பாதுகாக்கும் நோக்கில் ' ஜெயகாந்தன் உரைகள் ' என்ற தலைப்பில் நூலாகத் தொகுத்துள்ளார் த. ஸ்டாலின் குணசேகரன்.

61 பக்கங்கள் கொண்ட இந்நூலில் ஜெயகாந்தன் பங்கேற்ற இந்த இரண்டு நிகழ்ச்சிகள் தொடர்பான புகைப்படங்களும் இடம் பெற்றுள்ளன.

நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் நிறுவனம்  வெளியிட்ட இந்நூலின் விலை ரூ 60.00 ஆகும்.